# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௯ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௪ விசய—ஆவணி 1953—ஆகஸ்ட்டு | மலர் ௫

## தமிழ் நாட்டுப் பிரிவினை.

தமிழ் நாடென்பது இந்தியப் பெருநிலப்பரப்பின் தென் பகுதியாகும் அதன் எல்லைகளையும் அவ்வக் காலங்களில் வாழ்ந்த புலத்துறை முற்றிய நலத்தரையர் ஆங்காங்கு வரைந்துள்ளனர். தமிழ் நாட்டின் வடவெல்லை நிலங்கடந்த நெடுமுடியண்ணலின் வேங்கடவரை யாகும். தென்னெல்லை குமரியாகும் குணக்குங் குடக்கும் அலை கடலே எல்லையாகும். சிற்சில காலங்களில் இவ் வெல்லையுள் வடக்கு நீளுதலும் உண்டு, குறைதலும் உண்டு கரிகாலன் செங்குட்டுவன், ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் இராஜேந்திரசோழ தேவன் இவர்கள் காலங்களில் இமயம் அரசு எல்லையாகவும் தமிழ்மொழி எல்லை பரந்தும் இருந்ததற்குச் சான்றுகள் பல.

வடவேங்கடம் தென்குமரியாயிடை வாழ்ந்த மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய வளங்களை இப் பகுதியில் பெற்றதோடு மட்டுமன்றி அறிவுக்கும் அறத்திற்கும் வேண்டிய வளனும் உளனும் பெற்றுத் திகழ்ந்தார்கள். அதுமட்டுமன்று பிறருக்கு வழியகாட்டியாகவும் வாழ்ந்தனர் என்று வரலாறு கூறுகிறது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியினர் தமிழ்மக்கள் என்பதை அறியாதார் யார்?

இந்திய நாட்டின் பல்வேறு தேசிய இனங்களில் தமிழ் நாடும் ஒன்று. இப் பல்வேறு இனங்களும் நாகரிகத்தில் ஏறத் தாழ ஒற்றுமைப்படுவன வாயினும் அவ்வவ் வினங்களுக்கென்றே சிறப்பாக அமைந்த சில பண்பாடுகளும் பழக்க வழக்கங்களும் மொழியும் உண்டு. ஆகவே தமிழ் நாட்டவர்க்கும் சில தனிப்பட்ட பண்பாடுகளும் சிறப்புடைய மொழியும் உண்டு என்பதை இன, மொழி, நூல் வல்லார் உணர்வர். தமிழ் மொழியில் நூல் செய்த தமிழர்களே யன்றிப் பிற மொழியாளர் தமிழ்நூல் செய்த

காலத்தும் இப் பண்பாடுகள் முரணுவகையில் செய்து போந்தமையை இலக்கிய இலக்கணப் பயிற்சி சிறிதுடை யாரும் எளிதில் உணர்வர். பண்டை மூவேந்தர் காலங் களில் இவைகள் வெள்ளிடை மலையாய் விளங்கியமை மட்டுமல்ல தமிழரசர்கள் ஆண்ட காலம் வரை மேற்கூறிய மொழியும் பண்பாடும் வளர்ந்தும் செழித்தும் வந்தன. தமிழகத்தில் தமிழர் ஆட்சி என்று மறைந்ததோ அன்றே இவை குறைந்தது மட்டுமன்றி மறையவும் செய்கின்றன. உரிமைபெற்ற நாடுகளுடன் நாமும் தோளோடுதோள் கொடுத்துச் சமமாக நிற்கவேண்டும் என்று ஒவ்வொரு தமிழ் மகனும் எண்ணுகிறுன். அது வியப்பன்று உரிமை வேட்கையின்படி அது. உரிமைபெற்றதன் நோக்கந்தான் என்னே! பொருள்தான் என்ன?

அண்டையிலுள்ள ஆந்திர மக்கள் இவற்றை முன்னரே தெளிந்தார்கள் என்பதல்ல தெரிந்தவுடனே செயல்முறையில் காட்டத் தொடங்கினுர்கள். விளையாட் டாக அல்ல வீரத்துடன் முயன்று அவர்கள் குறிக்கோளை அடைந்தனர். ஒருசில வேற்றுப் பான்மை யுடை யோரும் எதிர்த்து வெற்றிகாண முடியாத நிலையில் வெற்றி பெற்றனன். அவர்கள் சிறந்து வாழ்வார்களாக.

மொழிவழி மண்டிலத்தின் உட்கருத்தே அவ்வம் மொழியாளர்களின் நாகரிகம் பண்பாடு வாழ்வு ஆகிய இவைகளை வளமுறச் செய்வதாகும். எனவே தமிழர்க ளாகிய நாமும் நம் மொழி, கலை பண்பு தொழில் வாணிகம் இன்னும் வாழ்க்கைக்கு அடிப்படையாக வேண்டுவன யாவும் எய்த வேற்றுமையின்றி ஈடுபட்டு நாட்டிற்கு வேண்டிய அமைப்புக்களைச் செய்ய நம் நாட்டைத் தனித்துப் பிரிப்பதற்கு முயலவேண்டும்.

நம் நாடு தனிநாடாக ஆகுமாஞல் ஏறத்தாழ பன்னூறு ஆண்டுகளாகப் பிறரிடம் சிக்கிச் சீரழியும் நம் மொழி தலை யெடுக்கும், கலை வளரும், தொழில் வளரும் மொழியின் தளைநீக்கி விட்டால் அது அரியணை ஏறும் என்பதுறுதி. மொழியாளர் செம்மை யுறுவர் என்பதும் திண்ணம். தாய்மொழி வழியாகத்தான் சிறந்த எண்ணங்களையும் கற்பனைகளையும் வெளியிட முடியும். அதன் வாயிலாகவே உயர்நிலைப் பள்ளிகளில் மட்டுமின்றிக் கல்லூரிகளிலும், அதனுள்ளும் மொழித்துறை மட்டுமின்றித் தொழில்

136-ஆம் பக்கம் பார்க்க.

# வாதாபி வெற்றி நாள்.

புலவர். நா. நல்லொளியன், மெய்கண்டான் நிலையம், கழார்.

நம் வெற்றி விழாக்களே நாடெங்கும் நடைபெறுகின்றன. இதுவே ஏனை விழாக்களினும் சாலச்சிறந்தது. இவ் விழாவே மக்கள் உள்ளத் துணர்ச்சியைத் தட்டியெழுப்பும். விழாக்கள் எல்லாம் ஒவ்வோர் சிறப்புப் பற்றி நிகழுமாயின் சில விழாக்களே மக்களுக்கு நன்மை பயப்பனவாகும்.

மக்கள் உள்ளத்து எழுந்திருந்த விடுதலை யுணர்ச்சியால் பல நாள் பாடுபட்டும் படைதிரட்டிப் போரிட்டு முடிவில் அரிய வெற்றி பெறுகின்றனர்.

இஞ்ஞான்று அன்னியராட்சியினின்றும் விடுதலை பெற்றதால் சில நாட்களுக்கு முன்னர் அந் நினைவு நாள் விழாவினை அனைவருங் கொண்டாடினோம். அவ் விழாவிற்குப் பின் 12—9—53-ல் ஓர் விழா கொண்டாடப்பட இருக்கிறது. அதனைப் பிறந்த நாள் விழா என்று பலர் சொல்லுவர்.

எந் நாடுகளிலும் அந் நாட்டிற் சிறந்த பெரிய தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆனால், இற்றை இந்தியப் பெரு நாட்டில் கடவுளாகிய விநாயகர் பிறந்த நாள் விழா கொண்டாடப்படவிருக்கிறது. அன்று புற்று மண்ணில் செய்த உருவிற்கு விரும்பியவாறு நீராட்டி, நிவேதித்து வழிபடும் முறை எல்லோரும் நன்கறிந்ததே,

அற்றைஞான்று பிள்ளையார் எவ்வாறு எழுந்தார்? இங்கிலை எய்தியதேன்? அவரியற்றிய சிறப்புவினை என்னை? விழாக் கொண்டாடுவதேன்? விழாத் தோற்றிய தென்னனம்? என்பன பற்றி பல நகரங்களில் சொற்பொழிவுகள் நடைபெறும், அதுபோழ் தவர் கூறுங் காரணங்களும் வரலாறுகளும் புனைந்துரையே யன்றி உண்மையானவைகளல்ல. உண்மைதான் யாது? என்பதை ஓல்லும் வகையில் வரலாற்று முறையில் ஆராய்வாம்.

தமிழகத்தில் கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னருள்ள பைந்தமிழிலக்கண விலக்கியங்களுள் இறைவணக்கமாகவோ அன்றி விநாயகர் உருவினைப்பற்றியோ, பிள்ளையார் கோவில் வழிபாடு முதலிய இருந்தமை பற்றியோ கூறப் பெறவே யில்லை. பிற்காலத் தமிழ் நூற்களிற்றான் விநாயகர் வரலாற்றுக் கதைகளும் இறைவணக்கப் பாடல்களும் எழுந்து தமிழகத்திற் பரவுவனவாயின.

மராத்திமொழி பேசும் சளுக்கிய நாட்டில் பன்னூறாண்டுகளாகவே விநாயக வணக்கம் நிலவி வந்துள்ளது. சளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி காலத்தில் வதாபியில மிகச் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வந்தது.

வட இந்தியாவினை யாண்ட ஹர்ஷப்பேரரசனோடு போரிட்டு விந்தியத்தின் தென்பால் அவனாட்சி பரவாது தடுத்த இரண்டாம் புலிகேசி தெற்கே பல்லவப் பெருநாட்டையும் கைக்கொள்ள விரும்பி போர் தொடுத்து மகேந்திர பல்லவனோடு சந்து செய்து வாதாபி யிருந்தான்.

அற்றைநாள் மகேந்திரன் மைந்தன் முதல் நரசிம்ம பல்லவன் ஓர் பெரும்படை திரட்டினான். திருச்செங்காட்டாங்குடியிற் பிறந்து பின் சிறுத்தொண்டர் என்னுஞ் சிறப்புப் பெயர்பெற்ற பரஞ்சோதி என்பவர் பல்லவப் படையிற் சேர்ந்தார். அயரா உழைப்பால் படைத் தலைவனு மாயினர்.

நரசிம்ம பல்லவனின் ஏவலால் பரஞ்சோதியின் தலைமையில் பெரும்படை புறப்பட்டுச் சளுக்கிய நாடு நோக்கிச் சென்றது. பரஞ்சோதி வாதாபிவரை இரண்டாம் புலிகேசியை விரட்டிச் சென்று முற்றுகையிட்டு அவனை வீழ்த்தி வெற்றி பெற்றான். அது கி. பி 642-ல் நடைபெற்றது. அவண் தக்கிணஈரப்பன் கோயிற்கருகில் ஓர் வெற்றித் தூணையும் நிறுவினான் படைத் தலைவன் பரஞ்சோதி.*

தொடரும்

*Dr. S.K Aiyangar's Int. to the 'Pallavars of Kanchi' Page 27

# வாலியும் வில்லியும்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

இடம்: அடவி.] [பொழுது: முற்பகல்

இரவிதன் சிறுவனும் யானும்போ ருறுங்கால்
இறுதி யியைத்திடும் இணையிலா வடிக்கணை
என்றன்மார் பகலம் இயைந்து புகுந்ததை
நன்றுடன் ஆய்ந்து நலமுற நோக்கலின்
இராமன் நாமம் நனியுறக் கண்டேன்.
சீரிய தாளினும் சிறப்புறு கையினும்
நேரியல் சங்கும் நேமியின் குறிகளும்
அவன்பா லுற்றதென் றறிந்தேன் யானே.
இவண்கண் ணுற்றேன்! இராமா! வென்விளிக்கு
நாணால் தலைகாய்ந்து நல்ல னென்முகம்
காணாது வெட்கிக் காண்கிறாய் மண்ணினை.
வாய்மையும் வழக்கும் காக்கும் மன்னவ!
தூய்மையுள் மரபிற் றோன்றிய நீயே
அடாதஇச் செயலை ஆயாது புரிந்தது,
கெடாத உன்குலம் கேடுறச் செய்தது.
தன்னை யொப்பார் தரணியி லிலரென
தன்னைத் தான்நினைந்து தருக்கிச் செய்தனை.
அறிவிலி யான அரக்கர் கோனே
நெறியுடை யுன்றன் நேரிழை தன்னை
கவர்ந்துசென் றவன்நிலை கலங்கமர் புரியாது
அவப்பெயர் வருமெனல் அறியாது குரக்கினை
கொல்லுதல் நெறியென கூறிய மனுநெறி
ஒல்லையில் உரைத்ததை உணர்த்திடு வாயே!
நன்று! நன்று! நகுதற் குரித்து.
உன்றன் செயலை உன்னிய காலே
நின்றன் தேவி நீங்கிய பின்னர்
உன்றன் அந்தக் கரண வுணர்வு
யாவு மழிந்து ஆண்மையிற் குன்றி

மேவிடும் உன்மனக் குரங்குஇம் மரத்துச்
சார்பினில் ஒளிந்து தகைவிலா முழுமகன்
ஆர்ந்துநின் றியைக்கும அறிவிலாச் செயலினை
நின்பால் கண்டதும நெறியழிந்த துன்மனம.
மறுவில் குடியுறு மன்னவ னானால்
செறுநிரை தீயவர் சிரங்க ளுருள
சிலையைத் தொடுத்தலுன் திண்ணிய மான
நிலைக்குத் தகுமதகும. நீஅதை விடுத்து
என்றனால் உனக்கு இயன்றதீங் குணர்த்தாய்
வென்றி ஒன்றிய விர லுறு வடிக்கணை
என்பால் உய்த்ததென ? உரைத்திடும் அறிவிலாய்!
மன்னர் மரபில் மதியுறு பெரியோன்
நீயோ ! நின்றன் குலத்தினர் தாமே
அரசச் செல்வ மனைத்தையும் சிற்றனை
உலரக்க விடுத்துஇக் கானை உவந்து
தவம்புரிந்து மேனிலை தன்னை எய்யாது
அவமெய்து நீயும் கேட்டினை அடைந்தும்
என்றன் அரசியல் ஏமுறு செல்வமும்
கன்றலில் பெருமையும் கலங்கிட சிதைத்துத்
தீங்கொன் றுன்பால் தினையளவு மியற்றா
பாங்கனென் உடலைப் பழுதுறச் செய்தாய்.
இருவர் போரினில் எதிருறுங் காலைநீ
பெருநல் வினையும் ஒழுக்கமாம பெற்றியும்
சிறந்திடு செல்வமாய்க் கருதும் கருத்துடை
அறமுடை யாயின் அரும்பெரும் கருணையின்
திறமுடை யாயின் செருவுடை எங்களை
விறலுட னழைத்து விதியுட னாய்ந்து
குற்றங் குற்றமில் பேதங்க ளாய்ந்து
உற்ற தண்டனை உரிமையோ டளித்தல்
அரசிய லுற்ற ஆண்டன்மை யாகும்.
அவ்வித மகற்றி அருக்கன்மா மதலைமேல்
செவ்விய கருணை சீர்கெட விடுத்தே
ஒருபுற மாகி ஒளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கிய கையோய் !
மிதிலையாம மன்னன் மருகனாய் மிளிர்ந்தோய் !

சதிசெய்து கணையை சார்த்திய தென்மேல்
நீதியோ ! அறமோ ! நீள்பெரும் நெறியோ ?
மறைந்து நின்று மறையுறும் கணையை
முறையாக விடுத்தல் முன்னைநாட் டொட்டு
வழிவழி யுங்கள் மரபிற் குரித்தே.
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாய்
முன்னாட் டாங்கிய முதிர்விலாச் சிறுவன்
நீர்முகக் குங்கால் நின்தாதை மறைந்து
கூரிய கணையால் கொடுமை விழைத்தான்.
அத்தகைத் திறத்தில் அமர்ந்தனை நீயும்.
நன்முறை திறம்பாது நல்லறங் காக்கும்
தன்மைய னாகி வேண்டிய தகுதியை
விட்டொழித் ததினால் மேதினி தனிலே
கட்டளைக் கடந்து காலெனச் செல்லும்
உணர்வு சென்றுழிச் செல்லுமெம் மொழுகலை
உணர்ந்தா யல்லை உயருறும் மரபோய் !
தோற்றத்தில் இந்திர னாகத் தோன்றினும்
ஆற்றலில் காற்றிலும் அதிக மிருப்பினும்
தீய செயலில் செறிந்தே உன்னறம்
மாய்ந்துதீ வினையெனு மாதீ யினால்
வாடி யுலர்ந்து வழிகெட்டு நிற்றலால்
நாடிய நிலத்துக்கு நற்பொறை யானாய் !
தேவியைப் பிரிந்து தியங்கு முனக்கு
ஆவியை இன்றே அகற்றிடும் யானே
என்னுரைப்ப தறியேன் ! ஏது மறியாய் !
என்றனின் வாணாள் எல்லை முடிந்ததுவே !
கைலையங் கடவுள் கருணையைப் பெற்றனன்.
எயிலுறு தேவா சுரர்முதல் ஏனையர்
வேண்டலுக் கிரங்கி விதிக்கு முன்னவன்
காண்டகு அராவணைத் துறக்கக் கண்டு
பாற்கடல் கடைந்து பாங்குட னமுதை
நாற்பாலோர் மகிழ நல்கிய தோளினன்.
வான மொழிந்த வலியுறும் நான்கு
ஏனைய பூதங்க ளேற்ற ஆற்றலன்.
எதிர்த்துப் பொருவோர் ஏவிடும் வன்மையில்

சிதைக்குமுன், பாதி அடையும் செயலினன்.
இச்செய லறிந்தே இழிவு கருதாது
கொச்சை யுறலொளிந்து குறிவிடுத் தனையோ!
மற்று மெட்டு திக்கின்மா டேகி
கற்றைச் சடையோன் கழல்பணி கருத்தினன்.
என்றன்வால் சென்ற இடத்தினு மிலங்கை
மன்னனின் கோலும் குடையும் வழங்கா
தென்பதை அறிகுதி! எளியோனுகித்
தனிமையில் நிற்கும தளர்வினில் மிக்கோய்!
உன்னைக் கொலவது ஓங்கிய அறத்தின்
வன்மை கெடுமென வாழ விடுத்தேன்.
என்முன்னில் லன்மின்! ஏகுமின் வல்லே!
என்னுற்ற லுணரா திருந்தநீ எச்செல்வம்
தன்னைபெற் றிருப்பினும், சார்ந்தஅப் பயனை
அடையாய்! நீஉடல் அடைந்ததே பழியாம.
இரக்க மிலெனின்பால் இறையருள் இலையே.

---


## ★ யாழ் நூல். ★

பேராசிரியர் விபுலானந்த அடிகளார் பதினுன்காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது :: தோற்றம் பொருந்தது.
விலை மலிந்தது.

| | | |
|---|---|---|
| மெல்லிய தாள் | தாள் உறை | 15—0—0 |
| | துணி உறை | 18—0—0 |
| தடித்த தாள் | தாள் உறை | 18—0—0 |
| | துணி உறை | 20—0—0 |

அஞ்சல் செலவு வேறு.

# பாவைப் பாவினியல்பு.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி: துணர் உகூ—மலர் ச—பக்கம் 112.)

திருவெம்பாவை, திருவாசகத்துள் இருபது பாக்கள் கொண்ட அருட்பனுவல். அருட்புலவர் உள்ளத்து அனுபவக் கடலில் ஆழ்ந்து கண்ட முத்தன்ன தத்துவத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. இஃது ஒருயிர் இறைவனது அன்பிற்கு ஊனுகி அவனருளால் சிவமயம் கண்டு, அவனறிவு முற்றி அவனுடனே இரண்டறக் கலக்கும் யோக சித்தியினை விளக்குகின்றது. இரண்டறக் கலத்தல் என்றமை யானே முப்பொருள் தோற்றம் விளக்கமுறும். இறை, உயிர், இவை இரண்டிற்கும் இடையேயுள்ளதனை நீக்கம் ஆகிய முப்பொருளுண்மையின் விரிவே திருவெம்பாவையாகும். மற்றும் இறையுணர்வால் எழுந்த ஒளியறிவே திருவெம்பாவை. பதி, பசு. பாசப்பொருள் விளக்கம், சிவ சக்தி விளக்கம்; சிவஞான உறவின் விளக்கம்; சிவ சித்தர் அனுபவ இயல்பு; அன்பு—அறிவு; பத்தி யோக வழிநிலை; பலனிற் பற்றின்றிப் பணியாற்றும் தத்துவம், சீவ-சிவப்பேற்றினுண்மை, இவை யாவும் திருவெம்பாவையுள் அடங்கியுள்ளன. கால தத்துவங் கடந்த முதல்வனே, திருவெம்பாவைப் பாவின் தனித் தலைவன். பாவை நோன்பினை மேற்கொள்ளும் மங்கையர் ஒன்பதின்மர். இவர்களுள் துயிலெழுப்புவர், முதற்கண் ஒருவர். மற்றைய எண்மர் துயிலெழுப்பப் பெறுகின்றவராவர். ஒன்பதின்மரும் ஒருங்கே இறைவனையும் அவனது அடியார்களின் புகழையும் பாடியும் வாழ்த்தியும், பூத்திகழும் பொய்கையிலும் நீர் நிலையிலும் பூம்புனல் பாய்ந்தும் விளையாட்டயர்ந்தும், பின் இறை முன்னின்று, 'ஐயா! வழி யடியோம்! குறையுமிலோம்! எய்யாமற் காப்பாய்! என வணங்கி வழிபடுதல் எம்பாவையின் பருப்பொருளாகும். மார்கழித் திங்கள் வைகறை நோன்பிற்குரிய திருமந்திரம் இப் பாவைப் பாக்களாதலான், நிறைமொழி மாந்தர், திருவெம்பாவையுள் 'சத்தியை வியந்ததாய'

அறிவு நுண்பொருளாம் செம்மறைத் தெளிவு அடங்கியுள்ள தென்பர்.

ஆயுங்கால், ஞால மென்பது சுத்த மாயை, அசுத்த மாயை என இரு பாற்பட்ட மாயை வகைகளின் அணுத்திரள் களின் சேர்க்கை. சுத்தமாயையில் இறைவனது திருவருட் சக்தி அசுத்த மாயை விட புள்ளி வடிவாய் உள்ளிருந்து விந்து தத்துவமாய் மிகுந்து தோன்றி வரிவடிவாய நாத தத்துவத்தை இசைத்தியங்கும். இவ்வாறு 'ஓம்' எனும் ஒலியால் இயங்குங்காலை சுத்த மாயையின் அணுத்திரள்கள் கடற்றிரைகளொப்ப ஒன்றையொன்று தாக்கவே, உறழ்ச்சி யால், ததியோடு கடைந்த வெண்ணெய் மோரில் கிடந்து திரண்டு வருவது போன்று, மாயையின் அணுத்திரள் களெல்லாம் ஒன்று கூடி உலகமாய்த் தோன்றுகிறது. இத் தகையவாறு உலகமெலாம் சிவ சத்தி விளையாடலென்ற தத்து வத்தைக் காணும் பாவைப்பாட்டில், வைகறையினை தோற்றத் திற்கு ஒப்பிட்டு, அச் சீரிய பொழுதில் நிகழும் நோன்பும், வழிபாட்டின் வகையும் சத்திகளை வியந்து எழுந்தன என்பர் அறிஞர்.

மற்றும் புலனாகும் பருப்பொருளாகிய உலகியற் பொருள் நிகழ்ச்சியை ஒன்பது சத்திகள் தம்முள் தொழிற்பட்டு உலகம் புலனாகும் தோற்றத் தொழில் செய்யும் முறைக்கு உவமை யாக்கி, உலக தோற்றத்திற்கு, வைகறைப் பொழுது உவமை யென்றும், விண்ணகத் தேவர்க்குரிய ஆண்டில் மார்கழித் திங்களே விடியற்கால மென்றும் குறிப்பு படும்படி, மணி வாசகர் இனிமையில் எளிய அழகும் பொருட் செறிவும் தோன்ற உருக்கமுடன் தெய்வ மணம் நாற மொழிந்தருளும் பான்மை, வாதவூரடிகளது பாடாண் புலமையைத் தெளிய வைக்கும். சத்தியை வியந்ததாய இச் செம்பனுவல், உலகம் தோன்றுவதற்கு மூலமாய் நின்ற அம்பிகை, கருணாம்பிகை, கௌரி, கங்கை, உமை, பராசத்தி, ஆதிசத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி எனும் ஒன்பது சத்திகளைக் குறிப்பதாகவும்,

முதல் எட்டு பாக்களும் முறையே மனோன்மணி, சர்வபூத தமணி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்மை, வாமை என்ற எண்சத்திகளும் ஒரு வரையொருவர் துயிலெழுப்பு முறையில் கூறப்பட்டதாகவும், பின்னர் எண்மருங்கூடி ஒன்பதாவது சத்தியை துயிலெழுப்பு வதற்கும் கூறப்பட்டதாகவும், ஒன்பதின்மரும் ஒருங்குகூடி இறைவனை வாழ்த்தியதாகவும் சாற்றுவதென்பது, ஞானப் புலமை ததும்பிய தமிழ்ச் சான்றோரது வழக்கு. உலக ஒடுக் கத்தில், சத்திகள் எம்முறையில் எதனில் ஒடுங்குகின்றதோ அதனின்றே அதற்கு நேரய எதிர்முறையில் மீளத்தோன்று மென்பதையும், காணும் பொருள்கள் யாவும் அழிவதில்லாது கரந்து மாறும், பெற்றியினையுடைய தென்பதினையும் குறிக்க எழுந்தது துயிலெழுப்பு முறை என்பது கூர்ந்து கவனிக்கற் பாலது. மேனாட்டுக் கூர்தல்முறை இத் துயிலெழுப்பு முறை யினை அடியொற்றி வருவதுகொண்டு திருவெம்பாவைக்கும் திருப்பள்ளியெழுச்சிக்குமுள்ள ஓர் நுண்ணிய இயையும் தொடர்பும் கண்டு கொள்ளப்படும்.

சிவத்தொண்டு புரியக் குழுமிநின்ற மங்கைமார்களுள் ஒருவர், வைகறைப்போதில் துயிலெழுப்ப, தம்முள் முறை வைத்துக்கூறி தம் இல்லஞ்சென்று ஆதியும் அந்தமிலானது அருட்டிறத்தை நினைந்தே துயின்றனர். அந் நினைவோடு துயின்றெழுந்த மங்கை அரும்பெரும் சோதியை 'போற்றி யென்வாழ் முதலாகிய பொருளே! புலர்ந்தது பூங்கழற்கிணை துணைமலர் கொண்டு ......... திருவடி தொழுவோம்' எனப் பாடி கடவுளன்புக் கோயிற் பிணைப் பிள்ளைகளாய தன் கூட் டத்து மங்கை மார்களுள் ஒருவரை துயிலெழுப்பச் சென்ற னள்.

'வாள்போன்று நீண்ட ஒளிமிக்க அகன்ற கண் ணிணை யுடையாளே! ஆதியும் அந்தமும் இலாத அரும் பெரும் சோதியுடையானையாம் பாடக் கேட்டும், துயிலொழி யாது இன்னும் தூங்குகின்றாயே! யாம் பாடக்கேட்ட ஒரு

மங்கை விம்மியழுது மெய்ம்மறந்து, போதார் படுக்கையிற் புரண்டு தன் வயமிழந்து மூர்ச்சையாயினளென்றால், நின் செவி வன்செவியோ! இஃதோ எங்கள் நண்பியரின் பரிசு! என வியப்புதோன்றக் கூறவே, அம் மங்கை துயில் நீத்துப் புறமே வந்தனள்.

மங்கையை அழைத்துச் செல்லும் மங்கையர்க்கரசி, மற்றொரு மங்கையின் இல்லத்திற்கேகி, நேர்ந்த அணிகளைப் பூண்ட அழகியே! அல்லும் பகலும் அன்பெலாம் இறைவன் பாலே என்று கூறும் நீ, இதுபோது உன் போதார் அமளிக்கே அன்பினை வைத்தனையே! இறைவனைப் பாடுங்காலமாகிய இவ் வைகறையொழிந்தால், பின் எக்காலம்? எனக் கூற, உடன் வந்தமாது, அணியுடைய நங்கையே! இகழத்தக்க தங்கள் சொற்களில் இவையும் சிலவோ! விளையாடிக் கொண்டு ஏசுவதற்கும் பேசுவதற்கும் இஃதா சமயம்! அலரவன், மால் முதலாய அமரரும் காணநிற்கும் திருவடிகளை, கோன்பின் பயனாக, பெருங் கருணையால் நம்மீது வைத்தருளும் எம்பெருமாள், அருட்பெருஞ் சோதியாவன், சிவலோகனும் அவனே! தில்லைத் திருக்கூத்தனும் அவனே. அத்தகைய பெம்மானுக்கு நமது அன்பு எத்தன்மைத்து.! யாம் ஆர்? என உரையாட, துயிலொழிந்த மாது வெளிப் போந்தனள். (இ—வ.)

———

# சங்கத்தின் அவசியமும், கடமையும்.

(தென்னாப்பிரிக்கா டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்.)

சங்கமென்ற பதம் பல்வேறு பொருள்களில் வழங்கப்படுமாயினும், இவண் நுண்ணுணர்வுடைய அறிவாளர் பலர் குழுமி ஆராய்ச்சி செய்யுங் கழகத்திற்கே சங்கம் என்று கூறுதும்.

நம் பழந்தமிழ் நாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன் முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என முச்சங்கமிருந்து, எந்தாய்த் தமிழ் மொழியில் நல்லிலக்கிய இலக்கண தருக்க முதலிய செந்தமிழ் நூற்கள் ஆக்கப்பட்டிருப்பதாக, இக்காலத்திலும் முன்னைய சங்க நூற்களென்று பெருமாண்புற்று விளங்கும் சீவக சிந்தாமணி தொல்காப்பியம் முதலிய பிறவுமுள்ள பெருங்காப்பியத்தினின்றும் தெளிந்தறிகின்றோம்.

நம் பழந்தமிழ் நாட்டின் தொன்மையும், கல்வி, இசை, ஓவியம், மருத்துவம், வானாராய்ச்சி, வீரம், அரசியல், வாணிகம் மற்றையவைகளிற் மக்கள் விழுமியவர்களாய் வதிந்து வந்தன ரென்பதற்குரிய காட்டுக்களை, நம் பழந்தமிழ் நூலகத்திலுந்தி உய்த்துணர்ந்தாலன்றி அறிதலரிது.

சரித்திர ஆராய்ச்சியின்படி பண்டைய காலத்தில் குன்றிக் கிடந்த மேனாட்டார்கள் இதுபோழ்து குன்றெனத் தோன்றி உலகாள்வதும், தொழில், வணிகம், உழவு முதலியவைகளில் நாளடைவில் பேராக்கம் பெற்று வருவதும் சங்கங்களின் பெரும் பணியேயாம். சிறிய நகரங்களிலும் ஆங்காங்கு அநேகச் சங்கங்களை நிறுவிப் பல்கலையாய்ந்துப் புதுப்புது வித்தியாகு காட்சிகளை நம்மவர் இறும்பூதுறத்தக்க ஆற்றி புகழ் பெறுவதும் சங்கங்களின் துணையே யன்றி வேறில்லை.

இவ்வாறு ஒவ்வொரு நாட்டாரும் பற்பல துறைகளில் முற்போக் கெய்திவரும் இந் நாளில் நம் தமிழ் மக்கள் கல்வி, தொழில், அரசியல் முதலிய பிறவுமுள்ள முன்னேற்றத்தில் பிற்போக்காக இருந்து வருவது மிகவும் வருந்தத் தக்கதேயாம். இவர்களின் உண்மையான

நிலைமை இங்ஙன மிருக்குமாயின் நம்மவர்கள் யாண்டு தான் உரிமையாளராகவும், மேம்பாட்டுக் குரியவராகவு மாவர். ஒரு தேயம் பற்பல, துறைகளிலும் முன்னேற்ற மடைந்து மாண்புற வேண்டுமாயின், அத்தேயத்திலுள்ளா ரனைவரும் கல்வி, கேள்விகளிற் சிறந்து உலகவாழ்க்கை நெறியினும், சமயவாழ்க்கை நெறியினும் பெறுதற்குரிய பல சங்கங்களை நிறுவி, அச் சங்கங்களின் ஒற்றுமையாலும் மற்றைய முன்னேற்றத்துக்குரிய ஊக்கமெனும் ஊர்தியி லுந்திப் பேறு பெறுவதை யோம்பிவரல் வேண்டும். இவன் பேறு என்பது செல்வத்தைக் குறித்தமையால் அச் செல்வம் நுண்ணுணர் வுடைமையேயாம்.

" நுண்ணுணர் வின்மை வருமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம் "

" அறிவுடையா ரெல்லாம் முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர் "

என்னும் ஆன்றோர் கூற்றையோர்க. செல்வங்களெல்லாம் அறிவின் துணையாலே ஈட்டுதலும் காக்கவும் படுதலால் அறிவுடையாரே எல்லா முடையாரெனவும், அவை யெல்லாம் முன்னரே யமைந்து கிடந்தாலும் அவை யழியாமைக் காத்தற்கும் அழிந்தவிடத்தே மீண்டும் ஈட்டற்கும் கருவியாகிய அறிவில்லாமையால், அறிவில்லா தவரை என்னுடைய ரேனுமிலர் என்றுங் கூறினர். இதனுல் அறிவுடையாரே பெரியார் என்பது பெற்ரும்.

இத்தகை அறிவுடையோரால் நடாத்தப்படும் சங்கங் கள் பட்டினமுதல் கிராமங்களீருகவும் மலிந்திருத்தல் வேண்டும். மக்கள் தன் வேதனத்துக்குரிய வினையாற்றி எஞ்சிய ஞான்றை வாளாக்கார்து, முன்னைய அறிவுடை யோரது சங்கங்களில் அங்கம் பெற்று அவற்றின் துணை யால் அறிவை ஊறச்செய்யும் நெறி நூற்களையும், இந் நிலவுலகின் நிகழ்ச்சியை எளிதில் உணர்த்தி வைக்கும் பத்திரிகைகளையும் உய்த்துணர்ந்து, ஏனைய நாட்டாரைப் போல் கல்வி, வணிகம், உழவு, கைத்தொழில், அரசியல் முதலியவைகளி லீடுபட்டு உயர்நிலை யெய்தல் வேண்டும்.

இக் காலத்தில் கிராமங்களிலும் மற்றைய விடங்களிலும் வழக்கறிந்துரைக்கும் அறிவு இன்னதென் றறிந்திராத பஞ்சாயத்தார்களையும், கைக்கூலி வாங்கிக் கொண்டு ஒரு

தலைச் சார்பாக வழக்குரைக்கும் போலித் தலைவர்களையும், அனாதை ஏழைகளின் ஆக்கத்தை நயத்தாலும் பயத்தாலும் வஞ்சிக்கும், பேராசைக் காரர்களையும் காண்கிறோமல்லவா? இன்னோரன்ன கொடுஞ் செய்கைகளின் காரணத்தாலே ஆங்காங்கு பூசலும் பிளவு முண்டாகி மக்களுடைய உயிர்கட்கும் பொருள்கட்கும் பெரிய அழிவை உண்டாக்கி விடுகிறது. நம்மால் நடாத்தப்படுஞ் சங்கங்களின் வாயிலாக இன்னவர்கட்கு நல்லறிவு புகட்டி வைப்பதோடு, பஞ்சாயத்து ஆட்சிமுறை முதலிய பொறுப்புவாய்ந்த வேலைகளைச் சங்கங்களின் சார்பாகவே நடாத்தி வரவேண்டும். நம்மவரில் பலர் நாங்கள் தலைமுறைத் தலைவனென்றும், பரம்பரைத் தலைவனென்றும் பழமையைக் கூறி உரிமை கோலுகின்றனர் இவ்விடத்தில் நாம் தலைவனென்பதற்குரிய இலக்கணம் அறிவுடைமையேயன்றிப் பிறிதில்லை. ஒரு நாட்டைக் கோலோச்சிக் காக்கும் அரசன் அந்நாட்டு மக்களுக்குரிய நேர்மையான வழியில் அரசுரிமை செலுத்திக் காக்க ஆற்றல் பெறாதவனாயிருந்தால், அவ்வரசனை நீக்கி வேறொரு நல்லரசனையேற்படுத்திக் கொள்ளப் பொது மக்களுக்கு உரிமை இருக்கும்போது ஆட்சிமுறை யறிவில்லாத பரம்பரைத் தலைவர்களையோ, தலைமுறைத் தலைவர்களையோ நாம் ஆதரிக்கவேண்டிய தேவையில்லை. நாட்டுக்கு நல்லரசில்லாதிருந்தால் அந்நாடு காடாகி விடுவதுபோல் நகரங்களுக்குரிய தலை மகனில்லாதிருந்தால் அந் நகரமும் நரகமாகிவிடும். அவ்விடத்தில் ஒரு போழ்தும் அருள்நெறி மிளிராது. பணக்காரர்களாயிருந்தாலும், பணமில்லாதவர்களாகவே யிருந்தாலும் பொறுப்பு வாய்ந்த நேர்மையான ஆட்சிமுறை யனைத்தும் அறிவுடையோர்க்கே உரியது.

இத்தகைய அறிவுடையோரால் நடாத்தப்படுஞ் சங்கங்கட்கு பொது மக்கள் யாவரும் அங்கம் பெற்றுத், தமக்குள் இயல்புக்குத் தக்கவாறு பொருளீட்டி, அப்பொருளைப் பொதுப் பொருளாக ஊதியந் தரத்தக்க நல் வழியில் பண்படுத்தித், திக்கற்றவர்கட்கும் மருத்துவசாலை பாடசாலைகட்கும், அனாதை ஆண் பெண் திருமணங்கட்கும் இறப்பு முதலிய புண்ணிய வழிகளில் செலவு செய்வதோடு, கைத்தொழில், வேளாண்மை, மற்றைய

சிறு தொழில் செய்வோர்கட்கும் பேருதவி செய்து வருவோமானால் நாட்டின் வறுமை விட்டகலுமென்பது உறுதி. மனிதனுய்ப் பிறந்த ஒவ்வொருவனும் தான் ஈட்டும் செல்வத்தை மற்றையருக்கும் நல்வழியில் வழங்கி அழியாப் பெரும் புகழ் பெறுவதே மனிதனது இலக்கணம். பொது நலத்திற் பற்றற்றவனது வாழ்க்கை "நடுவூரில் நச்சுமரம் பழுத்தற்று" என ஆன்ருேர் வலியுறுத்தி யுள்ளார்கள். அறிவுடையாரால் நடாத்தப்படுஞ் சங்கங்களின் அணிகல மாவது மேற்கண்ட நன்னயங்களே.

(அவை)

சிலச்சில விடங்களிற் சங்கம், சபா, அவை குழாம், கழகம் எனப் பிறவுமுள்ளப் பற்பலப் பெயர்களால் பகுக் கப்பட்டு வருமவைகளின் நடைமுறையை உற்றுநோக் குழி, உண்மையான நோக்கத்தோடு உழைத்து வருபவை ஒரு சிலவேயாம். ஏஞ்சியக் குழூஉக்க ளெல்லாம் அவைத் தலைவரின் நன்மைக்கும், மற்றைய ஆட்சி உறுப்பினரின் தன்னயத்துக்குமே ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரி கிறது. சிலர் ஒழுங்கற்ற விதமாய் சங்கமென்று தாபித்து தம் மனப் போக்கின்படி ஆட்சி செலுத்தி வருகின்றனர். ஐயகோ! இத்துணைப் போலிச் சங்கங்களின் மலிவால் பொது மக்களுக்குக் கிடைக்கும் ஊதியம் என்ன? இவை களெல்லாம் சங்கமென்ற பெயரைக் கெடுக்க வந்த பங்க மென்றே சொல்லவேண்டி யிருக்கிறது. ஒருவன் அவை யகத்தே பொருளற்ற சொற்களைப் பேசுவதைக் காணக், கற்றறிந்த ஒருவனால் பேசப்படும் பொருள் பொதிந்த ஒரு சொல்லினை யொக்காதல்லவா? அதுபோல் அறிவில்லார் நடாத்தும் அநேகச் சங்கங்களைக் காண அறிவாளிகள் நடாத்தும் ஒரு சங்கம் ஓரூரிலிருக்குமாயின், அவ்வூரின் குறைகளை இருளறுக்கும் ஞாயிறுபோல் அகலச் செய்யு மென்பது திண்ணம். எனவே, அறிவுடையாரால் நடாத் தப்படும் சங்கங்களை ஆதரித்து, நாளடைவில் நலந் திகழ் தற்குரிய நற்கருமங்களில் ஈடுபட்டு மக்கள் இருமைப் பயனை அடைய விரும்புகின்ருேம்.

# வள்ளுவரும் குறளும்.

தென்னாபிரிக்கா டர்பன் ச. மு. பிள்ளை அவர்கள்.

எண்ணுதற்கும் ஆக்குதற்கும் அரிய திருவள்ளுவரின் திருக்குறள் என்ற நூலின் அருமை பெருமைகளைப் பெரிதும் பாராட்டி வரைந்துள்ளனர் கற்றறிந்த பெரியாரிற்பலர். முப்பா னூலென்றும், தெய்வ நூல் என்றும், பொய்யா மொழி யென்றும், தமிழ்மறை என்றும் பொதுமறை என்றும் பல காரணப் பெயர்களால் விவரிக்கப்பட்டு விளங்கும் திருக்குறள் இற்றைக்குச் சுமார் 2,000 ஆண்டுகட்கு முன்னர் இயற்றப் பெற்றதாம்.

'நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிறு குற்றமு மகற்றியம் மாட்சியொடு.........'

என்றபடி நான்கு புருடார்த்தங்களையும் படைத்து, பத்துக் குற்றங்களையும் அகற்றி, பத்து அழகுகளைப் பெற்று, மனத்தை உவப்பித்து இன்பமடையச் செய்யும் மாண்போடு கேட்டார் சென்னி, தாழ்த்தவும் வாய் வாழ்த்தவும, நெஞ்சம் சிந்திக்கவும் செவி பருகவும், அத்துணைப் பெருமை வாய்ந்த தெய்வப் புலவரின் நூல் உச்சிமேல் வைத்து மெச்சத்தக்க தென்பதற் கையமில்லை. இனி வள்ளுவரின் திறத்தை அவர் குறட்பாக்கள் சிலவற்றைக் கொண்டு பார்ப்பாம்.

பண்டைக்கால ஏனைய புலவர்களைப் போன்றே நமது நாய னாரும் மக்களின் உரிமையைக் காட்டினும், கடமைகளையே முதன் முதல் எடுத்துக் கூறுகின்றார். எய்தற்கரிய மக்கட் பிறவியைப் பெற்ற மக்கள் கடவுள் மாட்டும, தம் குடும்பத்தார் பாலும், பிறரிடத்தும செய்யக் கிடக்கும கடமைகளைச் செவ்வை யாய்ச் செப்புகின்றனர். முதல் அதிகாரத்திலேயே,

'அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகலவன் முதற்றேயுலகு'

என்ற அழகிய மங்கலச் செய்யுளைச் சொல்லிப் பிறகு 'வாலறிவன்' 'மலர்மிசை யேகினான்' 'வேண்டுதல் வேண்டாமை யிலான்,' 'தனக்குவமை யில்லாதான்,' 'அறவாழி அந்தணன்,' 'என்குணத்தான்,' 'இறைவன்' என்ற உயரிய பதங்களைப் பெய்து ஒப்புயர்வில்லா அப்பரம் பொருளை வழுத்தி, அல்லும் பகலும் இடைவிடாமல் அன்னானை உள்ளம் உரை செயல்களார வாழ்த்தி ஏத்தினலல்லால், இப்பிறவிப் பெருங்கடல் நீந்தி உய்தலரி தென்பதைத் தெற்றெனப் புலப்படுத்தி யிருக்கின்றனர்.

பிறகு சொற்சுவையும், பொருட் சுவையும், அழகும் இனிமையும் வாய்ந்து உள்ளத்தையும் உணர்ச்சியையும் பேருவகை யடையச்செய்யும் குறட்பாக்களால் இல்வாழ்க்கையின் பெருமையும், இன்பமும் சொல்லுகின்றனர். இல்லறமே எவ்வாற்றானும் சிறந்தது என்பது ஆசிரியர் துணிபு. வென்றுளே புலன்களைந்து மெய்யுணர் உள்ளம் படைத்த துறவிகளின் மாண்பைப் பெரிதும் பாராட்டிப் போற்றினும், நமது புலவர் இல்லறத்தான் வாழ்க்கைக்கு இணை எதுவுமின்றென இயம்பா நிற்கின்றனர். ஏனெனின் அனைதைகட்கும், வறுமையாளர்க்கும் இறந்தார்க்கும் அவன் ஓர் பெருங்களைகண். தென்புலத்தார், தெய்வம் விருந்தினர் உறவினர் இவர்கட்கும் இன்றியமையா ஆதரவு. வாழ்வாங்கு வாழின் இல்வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான். இல்லறத்தில் இருக்கவேண்டிய முறையில் இருப்பின், பிறவழிகளிற் போய்ப் பெறக்கிடக்கும் பயன் பிரிதொன்றுமில்லையாம.

இவ்வாறு இல்லறத்தை இனிதே இயற்ற இணையில்லாத் துணைவி இல்லாள். நம நாட்டின் நாகரிகத்தின் உயர்வையும், நூல்களின் நுட்பத்தையும், கல்விப் பயிற்சியின் இயல்பையும் திறத்தையும், பெரியாரின் பெருமையையும், உலகிற் சிறந்தாரின் தன்மையையும், இறைவர்களின் மாட்சியையும் கடுகளவேனும் கண்டறியா இக் காலத்தில், ஆங்கிலங் கற்றவர்களிற் சிலர் நம நாட்டுப் பெண்களை ஆடவர் அடிமைகளைப போன்றே நடத்தினரெனப் பிதற்றுவது எத்துணைப் பேதமையைத் தெரிவிக்கின்றது! இல்லறமாய அறத்தை இடையூறின்றி நடத்தப் போதிய நற்குண நற்செய்கை வாய்ந்த துணைவியன்றோ இல்லாள். தங்கள்

ஒழுக்கத்தாலும், கணவனைப் பேணி அவனுக்குரிய அறங்களை யும் செவ்வனே செய்ய உதவுதலாலும், தாங்களும் தங்கள் கணவர்களும் புகழெய்திப் புண்ணிய மெய்திப் பொலியச்செய்ய வல்லா ரன்றோ வனிதையர்? காதன் மனையாளும் காதலனும் மாறின்றி யல்லவா தீதில் ஒரு கருமத்தைச் செயல் வேண்டும். தங்கள் மனைவிகளைக் கணவர்கள் கண்ணே போன்றும், கண் ணிற் கருமணியே போலவும் மணியாடு பாவையைப் போன்று மன்றே காதலித்துக் காத்து வந்தனர். அழகும் மகிழ்ச்சியும் அமைந்த இல்வாழ்க்கையின் உண்மை இன்பத்தை மக்களிற் சிலரே அறிந்து துய்க்க வல்லார் என்பதைக் குறள் நன்கு விளக்குகிறது,

'மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படுவார்'

இத்தகை இல்வாழ்க்கையிற் பெறக்கிடக்கும் பேறுகளில், மக் கட் பேறே மிகச் சிறந்ததாம். எத்துணை நயத்துடனும் திறமை யுடனும் உளமகிழ, உடல் புளகிக்க, மனம நெகிழ, சிறிய, இனிய, அழகிய சொற்களால் மக்கட் பேற்றின் மாண்பை அமைத்துளாரென அறைதலரிதாம். இயம்பரும ஓசையும், சொல்லருஞ் சுவையும் பொருந்திய,

குழலினி தியாழினி தென்பர்தம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்

என்ற செவ்விய செய்யுளொன்றே சாலும் புதல்வரின் அரு மையை விளக்க, பிறந்

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்

என்றதனுல் தந்தையின் கடமையையும்,

மகன்றந்தைக் காற்றுமுதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்

என்றதனுல் மகன் கடமையையும் குறித்துள்ளது, கவனிக்கற் பாற்று.

பெற்றோ ரெல்லாம் பிள்ளைகள் அல்லர் என்ற வுண்மையை,

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோ னெனக் கேட்டதாய்

என்ற பாடலின்கண் பண்புற வமைத்துச் நன்மக்களைப் பெறலே சிறந்ததென வுய்த்துணரவைத் துள்ளதும் பாராட்டற் குரித்து.

இதன் பின்னர் விருந்தோம்பலைப் பற்றிப் பொய்யா மொழிப் புலவர் புகல்கின்றனர். விருந்தோமபற் பொருட்டே இல்வாழ்வது. இல்லறத்தான் பாடுபட்டுத் தேடும் பொருள் முற்றும் வறுமையாளர்க்குத் தந்துதவும் பொருட்டு. நம் பசியை யடக்கிப் பொறுத்துக் கொள்ளுந் திறத்திலும் பிறர் பசியை யகற்றும் ஆற்றலே சாலச் சிறந்தது. விருந்தினரை நகை முகங் காட்டி நல்வரவேற்று இன்மொழி பகன்று உபசரித் தலே இல்லறத்தானுக்குத் தலைமையான கடன். அன்றியும் விருந்தோம்பல் அவனுக்கே உரியதாகின்றது. விருந்தினர்பால் எங்ஙனம் நடந்துகொள்ளல் வேண்டு மென்பதைத் தெய்வப் புலவர்,

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

என்ற குறளால் வெகு நயம்பட நவின்றுளது மெச்சற்பாலது. செல்வமும் அன்பினுல் வரையாது வழங்கும் அருட்குணமும், செவிலித்தாயும் குழவியும்போல் அவ்வளவு நெருங்கிய தொடர்பு வாய்ந்தன என்ற கருத்தை

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு

என அழகுறக் கூறியுள்ளார்.

மற்றும் இல்லறத்தான், துறவி, அரசன், குடி, எவரா யினும் அறத்தைத் தலைமேற்றாங்கி ஆற்றலே அவர் கடன். நற் குணத்தை நாடி நல்லணியாய்ப் பூணலே பெரிது. ஒழுக்கமே மக்களுக்கு விழுப்பந்தருவது; ஆதலின் அஃது உயிரினும் ஓம்பப்

படுவது. வாய்மையே வாய்க்கு அமைந்தது. மனத்துக்கண் மாசில னுதலே மாண்புடைத்து. கொல்லாமையினும் விரதம் குவலயத்தில் வேறில்லை. தன்னெஞ்சறிவதைப் பொய்த்தலினும் இழிகுணமின்று. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டு; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" இவ்வாறு இன்னும் பல இங்கு எழுதவும் விளக்கவும் இயலாத அத்துணைப் பெரிய அரிய அறங்களை விளங்க வைத்துப் பணியாளர்முதல் பாராளு வோர்வரை யாவர் வாழ்க்கைக்கும், தொழிலிற்கும், பொருந்திய அறநெறிகளில் நமது செந்நாப் போதாரால் கூறப்படாத தொன்றில்லை.

மேற்சொன்ன அறங்கள் அனைத்தையும் ஆற்றற்கு அருந் துணையும் பெருங்கருவியும் ஆவது அன்பு. அன்பின்றேல் ஒன்று மாவதில்லை. அன்பில்லா வாழ்க்கை அவலமாய்விடும்.

அன்பகத்தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று

என்பதும்,

என்பிலதனை வெயில் போலக் காயுமே
அன்பி லதனை யறம்

என்பதும், வாழ்க்கைக்கும் அதன் பயனை யெய்தற்கும் அன்பு எவ்வளவு இன்றியமையாத தென்பதைத் தெரிவித்து நிற்கின்றன.

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்புமுரியர் பிறர்க்கு

என்ற வியத்தகு செய்யுளில், அன்புடையார்க்கும் அன்பி லார்க்கு முள்ள வேறுபாட்டை யாவரும் வியப்புற விளக்கி யிருத்தலைக் காண்க. இவ்வன்பே பிறரிழைத்த் துன்பத்தைப் பொறுக்கவும், துன்பமிழைத்தாரை மன்னிக்கவும், அவர் நாண அவர்க்கு நன்னயஞ்செய்யவும காரணமாய் அமைந்தது. மேலும்

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை

என்றபடி புவிப் பொறையை வகிக்கவும்

இன்னு செய்தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

என்றபடி பகைவர் மாட்டும் என்றும் நல்லதே செய்யும் சான்ருண்மையைக் கைக் கொள்ளவும் அளவில் அன்பன்றே காரணம். மேலும்

வலியார்முற் றன்னை நினைக்கத்தான் றன்னின்
மெலியார்மேற் செல்லுமிடத்து

என்றதை, எப்பொழுதும் ஒவ்வொருவரும் மனத்தகத்து இருத்தி நடப்பின் இவ்வுலகு உயரிய நிலையையும், சீரிய வாழ்வையும், அரிய அமைதியையும், இன்பத்தையும் படைத்து இலங்கு மென்பதில் ஐயம் எட்டுணையு முண்டோ? உண்மைப் பெருமையுடையார் என்றும் பணிந்தே நடப்பர்; சிறுமை படைத்தாரே தம்மைப் புகழ்ந்து செருக்கித் திரிவர்.

எந் நிலையில் நின்ருர்க்கும் எத்தொழில் பூண்டார்க்கும் ஊக்கம், விடாமுயற்சி, தன்நம்பிக்கை, உடலுழைத்துஉண்டல் ஆகிய இவை இணையிலாக் குணங்களாம். நெற்றி வியர்வை சொட்டப் பாடுபட்டு ஈட்டிய பொருள்கொண்டு குடிக்கும் கூழ் அமரர் அருந்தும் அவ்வமிழ்தினும் இனிது. முயற்சியுடையார் என்றும் இகழ்ச்சி யடையார். கடவுளை நம்பி நங்கடமைதனைச் செய்யின் நாம் கருதாத பயன்கள் கிட்டும். முயற்சியின்றி உறங்கிக் கிடந்து, பொருளில்லே மென்று சொல்லித் திரியும் மாந்தரைக் கண்டு மண்மகள் நகைக்கின்ருள் என்ற கருத்தமைத்து,

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லா ணகும்.

என்ற பாடலைப் பயந்தருளிய பெரியாரின் பெருமையை என்னென்பது? நன்மையைக் கடைப்பிடித்து ஓயாது ஒழியாது பாடுபட்டு வருபவர் விதியையும் வெல்ல வல்லுநர் என்ற கருத்துடன்,

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்

என்ற அமுத வாக்கை மலர்ந்தருளியதை மனத்தில் மறவாது வைத்தல் மிக நன்று. அடுக்கடுக்காய் இடுக்கண்வரினும், அஞ்சாது அசையாது அவரவர் அறந்தன்னை ஆற்றலே ஆண்மையாம். உலகத்தில் தோன்றிய அனைவரும் அல்லல்களுக்கு ஆளாகி அலைந்து வாடல், இயற்கையேயென்ற பேருண்மையையுணர்ந்து அகங் குன்றாது இருத்தலே சிறந்தது என்று மாந்தர்க்குப் புகட்டும் கருணையுடன் நமது திருவள்ளுவ நாயனார்

இடுக்கண் வருங்கா னகுக வதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்

என்று உளத்திண்மையை யளிக்கும் மொழியைத் தந்தனர். இவ்விடத்து மக்களிற் சிறந்தாரின் குணத்தையும், கீழ்மக்களின் குறிகளையும் நினைவிற்குக் கொண்டு வராமல் விடுவதற்கு மனமில்லை. அவை,

நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும
பேணுமை பேதை தொழில்

என்பதும்.

அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு

என்பதுமே.

ஈண்டு புலவர்களிற் சிறந்த நமது நாயனார் தம் நூலின் பெருமை முற்றும் இச்சிறு கட்டுரையின்கண் எடுத்துக்காட்

டல் மிகவரிது. தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனத தகைய அவர் தம அரிய அழகிய உயரிய நூலின்
கண் சொல்லியிருப்பன முற்றும முக்காலத்தும், எக்காலத்தும்,
எச்சமயத்தார்க்கும் உடன்பாடாயிருப்பன என்பதை நன்கு
நோக்கத்தக்கது. இஃது இவ்வுல குள்ளளவும நிலவி நின்று
நவிலரும நன்மை பயந்து, மன்பதை உய்யச் செய்யு மென்பதிற்
சிறிதளவும ஐயப்பாடின்று.

---

(114-ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறைகளிலும் தமிழ் மொழியே பயிற்சி மொழியாக
அமையும், அமையவேண்டும். தாய்மொழிப் பற்றில்லாத
எந்த நாடும் முன்னேற முடியாதது மட்டுமல்ல; பிறருக்
கடிமையாவதும் அதனாலதான். நாடும் மொழியும் உயிரும்
உடலும் என்பார் அறிஞர். அரசியல், சமுதாயம், கல்வி
இவைகளில் நாட்டு மொழிக்கு மதிப்பில்லையேல் அதனைப்
பேசு வாருக்கு மதிப்பில்லை என்பதுதான் பொருள்.
இதனைத் தமிழர் யாவரும் நன்குணர்தல் வேண்டும். தாய்
மொழி மூலம் கல்வி பயிற்றப்படாமையால் கல்வி பயிலப்
பெரும்பொருள் செலவாவதோடு கூட நீண்டகாலமும்
செலவாகிறது அதனால் பொருளற்றோரும், உழைத்து
உழைத்துப் பயில நேரமற்றோரும் நாளுக்குநாள் தாழ்
வடைகின்றனர். குறைந்த செலவில் குறைந்தகால
அளவில் நிறைந்த கல்வியை எல்லோரும் அடையவேண்டு
மானால் அதற்குத் தாய்மொழி மூலம் கற்பித்தல் இன்றி
யமையாததாம். தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கத் தாய்
மொழி அரசியல் மொழியாக இருப்பது இன்றியமையா
ததாம்; தாய்மொழி அரசியல் மொழியாவதற்கு அதனைப்
பேசும் மக்கள் உரிமையுடன் வாழவேண்டும். அவர்
களுக்கு வேண்டியதை அவர்களே செய்யவேண்டும்.
அதற்கு அவர்கள் நாடு பிறருக்குக் கட்டுப்பட்டதாக
இருப்பின் இயலாது. எனவே எவ்வாற்றானும் தமிழ் நாடு
பிரிந்தாலன்றித் தமிழனுக்கு வாழ்வில்லை என்பது
புலனாகிறது. இக்கருத்தைத் தமிழர்கள் முன்னறே
உணர்ந்திருந்தாலும் செயல் முறையில் வழிகாட்டிய
ஆந்திர மக்களை வாழ்த்தி ஒற்றுமையுடன் தனிநாடு அடை
முயல்வோமாக.

---